திற்குச் சென்று பார்த்து இருக்கிறேன். இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இது சம்பந்தமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தரை மட்டப் பாலம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 170, திரு. டி. வேலையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

170—

நகரங்களில் சாலைகள், பேருந்து நிலையங்கள் ஆகியவைகளை வடிவமைக்கும்போது பாதசாரிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்

*11590—திரு. டி. வேலையா :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரங்களில் சாலைகள், பேருந்து நிலையங்கள் போன்றவைகளை வடிவமைக்கும்பொழுது, பாதசாரிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தனி இடம் ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகர சாலைகள் வடிவமைக்கின்ற போதெல்லாம் வரையறுக்கப்பட்டுள்ள குறியீடுகளின்படி பாதசாரிகளுக்கு வசதியாக தனி இடம் ஒதுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-25

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, இப்போது எல்லா இடங்களிலும் குறிப்பாக நகரங்களில் வாகனப் போக்குவரத்து பெருகி வருவதாலும், புதிய சாலைகள் போடுவதாலும், பழைய சாலைகளை மேம்பாடு செய்வதாலும், பல பல கட்டிடங்கள் கட்டப்படுவதாலும் நடந்து செல்லும் மக்களுக்கு ஆபத்தும், அசௌகர்யமும் உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு புதிய சாலைகளை அமைக்கும்பொழுது, பழைய சாலைகளை மேம்பாடு செய்யும்போது வரைபடம் மற்றும் மதிப்பீடுகளைச் செய்யும்போது நடைபாதைக்குச் சில வழிவகை செய்தால், பொது மக்களுக்கு வசதியாக இருக்கும். இதில் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித் துறை, போக்குவரத்துத் துறை போன்றவற்றிற்கு பொறுப்பு இருக்கிறது. எனவே வருகின்ற காலத்தில் இதை அதிக கவனத்தில் கொண்டு, அரசு செயல்படுமா என்பதை தங்கள் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

1993 மார்ச் 30]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்களில் சாலைகள், பேருந்து நிலையங்கள் போன்றவற்றை வடிவமைக்கும் பொழுது அந்த நகரங்களில் பாதசாரிகளுக்கு ஏற்ப அந்த நடைபாதைகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இவ்வளவு இவ்வளவு தூரம் இருக்க வேண்டும் என்று சில குறியீடுகள் வைக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் மொத்தமாகச் சொல்வது என்பது கொஞ்சம் காலம் அதிகமாகும் என்கின்ற காரணத்தினால், சுருக்கமாக அதைப்பற்றிச் சொல்ல விழைகிறேன். பொதுவாக நகரங்களில் சாலைகள் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் போது, நடைபாதைகள்—பிளாட்பார்ம் போன்றவைகள் அகலப் படுத்தப்படும்பொழுது, அரசு குறியீடுகள் எந்த அளவிற்கு இருக்கவேண்டுமென்று அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது. அது நகராட்சி நிர்வாகமாக இருந்தாலும், அல்லது போக்கு வரத்தைக் கட்டுப்படுத்துகின்ற டிராபிக் ரெகுலரைஸ் செய்கின்ற இலாக்காவாக இருந்தாலும், நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும் அவர்கள் ஒன்றோடொன்று இணைந்து நகர வடிவமைப்பை ஏற்படுத்துகின்றபோது, எந்த அளவிற்கு இருக்க வேண்டுமென்று டிபார்ட்மெண்டிலிருந்து கன்கரன்ஸ் பெற்று, அந்த அளவிற்கு செயல்பட்டு வருகிறது. ஆகவே இது மாதிரி பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்பு இல்லை. உறுப்பினருடைய யோசனையை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர சாலைகள், பேருந்து நிலையங்களில் உள்ள பாதசாரிகளுக்குத் தனி இடம் இருந்தாலும், அது நடைபாதைகளில் வியாபாரம் செய்பவர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றை அகற்றி பாதசாரிகளுக்கு உதவ அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையோரங்களிலும் மற்றும் பாதசாரிகள் நடந்து செல்கின்ற இடங்களிலும் ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்பதை இந்த அரசு அறியும். அப்படிப்பட்டவை போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும்பொழுது ஆங்காங்கே புகார்கள் வரும்போது, அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நகராட்சியாக இருந்தால், நகராட்சி நிர்வாகம் எடுக்கிறது. மாநகராட்சியாக இருந்தால் மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை

எடுத்து வருகிறது. நெடுஞ்சாலைத் துறையின் கீழ் வருகின்ற இடங்களில் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்தால், நெடுஞ்சாலைத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏரிகளில் ஆக்கிரமிப்பு செய்தால் பொதுப் பணித் துறையின் கவனத்திற்கு வருகின்ற போது அங்கேயிருக்கின்ற பொதுப் பணித்துறையின் மூலம் ஆக்கிரமிப்புக்களை அகற்றி வெளியேற்றுகிறோம். ஆகவே, புகார்கள் அரசின் கவனத்திற்கு வருகின்றபோது அந்த புகார் களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. தேவராஜ்.

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பாதசாரி களுக்கு ஆக்கிரமிப்புக்களை அகற்றி ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். நகரங்களில் பாதசாரிகள் சாலைகளைக் கடந்து செல்வதில் சிரமம் இருக்கிறது. அந்த இடங்களில் சுரங்கப் பாதை அமைத்துக் கொடுத்தால் பொது மக்களுக்கு வசதியாக இருக்கும். அப்படிப்பட்ட சுரங்கப் பாதையை முக்கியமான நகரங்களிலாவது அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது என்பதை இந்த அரசு அறியும். ஆகவே, நெரிசல் அதிகமாக இருக்கின்ற முக்கியமான பகுதிகளில், சென்னை, கோவை, மதுரை போன்ற இடங்களில் இந்த மாதிரி பிரச்சினை வருகின்றபோது, சென்னையிலே அதிகமாக சுரங்கப் பாதைகளை இப்போது அமைத்துக் கொண்டிருக்கிறோம். சப்-வே அமைத்துக் கொண்டிருக்கிறோம். மதுரையில் திட்டம் இருக் கிறது. ஆகவே, இருக்கின்ற நிதியாதாரங்களைப் பொறுத்து எங்கெங்கு நெருக்கடி அதிகமாக இருக்கிறதோ, அங்கங்கே, சுரங்கப்பாதை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபாதையில் பிளாட்பாரங்களில் நடக்கின்ற மக்க ளுக்கு இடையூறாக ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறையும் மற்றும் போக்கு வரத்துத் துறையும் சேர்ந்து ஆக்கிரமிப்புக்களை அகற்றினால், மறுநாளே ஆக்கிரமிப்பு செய்துவிடுகிறார்கள். அதே போல பாத சாரிகளுக்கு நடப்பதற்கு நடைபாதைகளுக்கென்று இன்னொரு வேலி தனியாக அமைத்துத் தரப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

[1993 மார்ச் 30]

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு இடம் கொடுத்துவிட்டு ஒரு பகுதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்கிறாரா அல்லது ஆக்கிரமிப்புகளை நடைபாதையிலிருந்து மொத்தமாக அகற்ற வேண்டும் என்று நினைக்கிறாரா என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும். யாரும் நடைபாதைகளிலே ஆக்கிரமிப்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்வதில்லை. நடைபாதைகளானாலும், போக்குவரத்து வாகனங்கள் செல்லுகின்ற பகுதிகளானாலும் அதிலே யார் ஆக்கிரமிப்பு செய்தாலும் அது பொதுமக்களுக்கு இடையூறு என்ற காரணத்தினாலே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படி ஆக்கிரமிப்புகளை எடுக்கின்றபோது சில பேர் வந்து ஆக்கிரமிப்பை எடுக்க வேண்டாம் என்று சொல்கிறார்கள். அதுபோன்ற தலையீடுகள் இல்லாமல் இருந்தால் அரசு வலுவாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்களிலே இருக்கின்ற சாலைகள், பேருந்து நிலையங்கள் போன்றவைகளை அமைக்கும்போது பாதசாரிகளுக்குத் தனியாக வடிவமைப்பு கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் பேசும்போது பாதசாரிகளுக்காக அமைக்கப்படுகிற பாதைகளில் நடைபாதைக் கடைகள் வந்துவிடும் என்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மை. குறிப்பாக பேருந்து நிலையங்களில் கடைகளை வாடகைக்கு விட்டு அதற்கு முன்னாலே பொதுமக்கள் போவதற்கு ஒரு இடத்தைக் கொடுத்தால் கடைக்காரர்கள் அந்த இடத்தை உள் வாடகைக்கு விட்டுவிடுகிறார்கள். பொதுமக்கள் போகவே முடியவில்லை. ஆகவே, இப்படி நாம் தினமும் ஆக்கிரமிப்புகளை அகற்றினாலும் மீண்டும் ஆக்கிரமிப்பு வரும். அதற்கு இரயில்வே நிலங்களை எப்படி ஆக்கிரமித்தால் அதை உடனடியாக அவர்கள் அகற்றுகிறார்களோ, அதற்குள்ளே நுழையக் கூடாது என்று கட்டுப்பாடான கடுமையான சட்டம் போடுகிறார்களோ அது போன்று ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு மாநில அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பதிலே மிகவும் தெளிவாக இருக்கிறார் என்பதை இந்த அரசு அறியும். அதே போல எல்லா உறுப்பினர்களும் அதற்கு ஒத்துழைக்க

வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல உறுப்பினர்கள் அல்லாதவர்களும், பொது மக்கள் பிரதிநிதிகள் மற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில் நான் தெளிவகாச் சொல்லியிருக்கிறேன். இந்த பஸ் ஸ்டாண்டு கடைகளை வாடகைக்கு விடுகின்றபோது அவர் சொல்வது போல அந்தப் பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. அந்தக் கடையை வாடகைக்கு விடுகின்றோம். அதற்கு முன்னாலே கொஞ்சம் இடம் இருக்கிறது என்று சொன்னால், பொது மக்கள் நிற்பதற்கு வசதியாக இருக்கின்ற இடத்தைக் கூட உள் வாடகைக்கு சப்-லீஸுக்கு விட்டுவிடுகிறார்கள். வருமானத்திற்காக. ஆக அப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றபோது அரசின் கவனத்திற்கு வந்தால் அதிலே நடவடிக்கை எடுக்க முடியும். அதிலே அந்த கடைக்காரர் கடை வைத்திருக்கிறாரா அல்லது சப்-லீசுக்கு விட்டிருக்கிறாரா என்பதெல்லாம் இந்த அரசுக்கு தெரியாது. ஏனென்றால், ரெக்கார்டு பூர்வமாக யாரும் சப்-லீசுக்கு விடுவதில்லை. அவர்களாக லோக்கல் அட்ஜஸ்ட்மெண்ட் என்று சொல்வார்களே, அவர்களாகவே செய்துகொள்கின்ற அந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் தான் அப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அது நல்ல யோசனைதான். அனைவரும் ஒத்துழைத்தால் அந்த மாதிரி புகார்கள் இருக்குமானால் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற மாநகராட்சி நிர்வாகத்திற்குத் தெரிவிக்கலாம். நெடுஞ்சாலைத் துறையில் இருக்குமானால் நெடுஞ்சாலைத் துறைக்கு அதைத் தெரிவிக்கலாம். ஆகவே, அப்படிப்பட்ட புகார்கள் வருகின்றபோது உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டும். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 171, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

171—

<u>மேட்டூர் நகரியத்திலுள்ள பாதாளச் சாக்கடைத் திட்டம்.</u>

<u>*9255—திருமதி செ. சுந்தராம்பாள் :</u>
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையில், மேட்டூர் நகரியத்தில் முன்னரே உள்ள பாதாள சாக்கடைத் திட்டம் தற்போது உள்ள மக்கள் தொகை மற்றும் குடியிருப்பு வசதிக்கேற்ப விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?